RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s145

OPEN ACCESS

# பக்தி நெறியில் பெண்கள் (இயற்கை நெறிக் காலம் முதல் சமய நெறிக் காலம் வரை)

மி.சு. எழிலரசி [அ, *]

[அ] தமிழ்த்துறை, தூய மரியன்னை கல்லூரி (தன்னாட்சி), தூத்துக்குடி-628001, தமிழ்நாடு, இந்தியா.

# Women in Devotion and Religions (From the Natural Moral Period to the Religious Period)

**M.S. Ezhilarasi [a, *]**

[a] Department of Tamil, St. Mary's College (Autonomous), Thoothukudi-628001, Tamil Nadu, India

* Corresponding Author: anni.ezhil3@gmail.com

Received: 26-12-2021
Revised: 12-08-2022
Accepted: 27-08-2022
Published: 28-11-2022

**ABSTRACT**

The woman was the foremost in the early maternal society. Goddesses were also seen as primary in worship. The elements of natural energy were praised as feminine. They saw them as forces of prosperity. The goddesses found in the worship of nature later entered the religion. The goddess Kali (Kottravai) later became a part of Shiva. Women have been monks in Buddhism and Jainism since the early days of the religion. The female monks performed excellent religious duties. In Saivism and vaishnavism the religion that originated in this Tamil soil, woman was seen as a Part of the God. Historical references to many female theologians are also found in all religions. Christian nuns have been performing well since the arrival of European missionaries. There is a history of blessed women in Islam as well. Yet in later times that dignity of femininity gradually diminished. Equality for woman was denied in all religions. There was a situation where the woman was considered as a defilement. To this day such a situation is found in all religions.

**Keywords:** Maternal Society, Goddesses, Female Monks, Theologians, European Missionaries, Dignity of Feminity, Defilement, Religions.

## முன்னுரை

"பெண்ணின் பெருந்தக்க யாவுள." (Kundrakkudi Adigal, 2011) என்று திருக்குறள் இல்லறவியலில் - வாழ்க்கைத் துணைநலம் என்ற பகுதியில் பெண்மையின் சிறப்பு மிக்க மாண்பினைப் போற்றுகிறார். மேலும் இதே பகுதியில்,

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

பெண்ணின் கற்பு வலிமையையும், அவள் ஒரு ஆணைச் சார்ந்து, அவனுடைய பாதுகாப்பில் மட்டுமே வாழ வேண்டியவள் அல்ல என்பதையும் வலியுறுத்தியுள்ளார் (Kundrakkudi Adigal, 2011). தற்காத்தல் - 'கற்பு' உயிரினைச் சார்ந்த ஒழுக்கம். இதனை ஒருவர் தானே காத்துக் கொள்ள வேண்டும். பிறர் காத்தல் அரிது. தற்கொண்டான் பேணல் - காதலின்பம் குறைபடாதவாறு ஒழுகி, அதன் வழி தன் கணவனின் கற்புக்குத் துணையாய் அமைதல். "கற்பு நெறியில் தன்னையும் தன் கணவனையும் காத்துக் கொண்டு, தமக்குப் பெருமை சேர்க்கும் புகழையும் காப்பாற்றிக் கொள்வதில் உறுதி குலையாமல்

இருப்பவள் பெண்" (Kundrakkudi Adigal, 2011). இத்தகைய பெண்மையானது இயற்கை நெறிக் காலம் தொட்டு வணக்கத்திற்குரிய தொன்றாகப் பார்க்கப்பட்டு வருகிறது. இயற்கை நெறிக் காலத்தில் நிலவிய சிறுதெய்வ வழிபாட்டு நெறியிலும், பின்னர் வளர்ச்சி பெற்ற பக்தி நெறிச் சமயங்களிலும் பெண் தெய்வ வணக்கம் சிறப்பிடம் பெற்றுள்ளது. பெண்கள் இறையடியார்களாக, துறவிகளாக வாழ்ந்து சமயத் தொண்டு ஆற்றியிருப்பதும் சமய வரலாற்றில் சிறப்பாகக் காணப்படுவதை இக்கட்டுரை வழி அலசி ஆராயப்படுகிறது.

## இயற்கை நெறிக் காலத்தில் பெண் தெய்வ வழிபாடு

தாய் வழிச் சமுதாயத்தில் பெண் முதன்மை பெற்றுத் திகழ்ந்தாள். வழிபாட்டிலும் பெண் தெய்வங்களே முதன்மை பெற்றன. "மிகுதியான செழிப்பு தரும் சக்திகளையும், ஆற்றல் வாய்ந்த இயற்கைக் கூறுகளையும் பெண்ணின் கூறாகவே கருதி வழிபட்டான்", என்பார் (Seenivasan, 1975). சங்க இலக்கியங்களில் தாய்த் தெய்வம் முதன்மையாகப் போற்றப்படுகிறது. சிலம்பு, மணிமேகலை போன்ற காப்பியங்களிலும் தாய் தெய்வம் போற்றப்படுகிறது. "தமிழகத்தில் பெண் தெய்வங்களுக்கென ஏறத்தாழ 2500 கோயில்கள் உள்ளன" என மேலும் பட்டியலிடுகிறார் (Seenivasan, 1975). அவர்கள். தொல்காப்பியர் தாய்த் தெய்வம் பற்றிக் கூறுமிடத்து கொற்றவை பற்றிக் குறிப்பிடுகிறார் (Seenivasan, 1975). கொற்றவை போருக்குரிய தெய்வமாக இலக்கியங்களில் காணப்படுகிறது. வனத்தில் உறையும் தெய்வமாகத் தாய்த் தெய்வம் போற்றப்பட்டதை, "ஓங்கு புகழ்க் கானமர் செல்வி" என குறிப்பிடுகிறது. இத்தாய்த் தெய்வ வழிபாடு இங்கு மட்டுமன்று உலகெங்கும் நிலவியிருந்தது. "தாய்த் தெய்வத்தை எல்லோரையும் பெற்ற தாயாகக் கருதுவதும், அழியாக் கன்னியாகக் கருதுவதும் சுமேரியா, எகிப்து, அசீரியா, இந்தியா ஆகிய நாடுகளின் பழைய நாகரிகங்களில் காணப்படுகிறது"4 என்கிறார் (Samy, 1976).

தாய்த் தெய்வ வழிபாட்டில் கொற்றவை பழந்தமிழர்களின் தாய்த் தெய்வமாகும். பாலை நிலத் தெய்வமாக இருந்து, எல்லோரும் வணங்கும் நிலைக்கு உயர்ந்த தெய்வமாகும். கொற்றவைக்குப் பழையோள், காடு கிழாள், ஐயை எனப் பல பெயர்களும் உள்ளன. இத்தாய்த் தெய்வத்திற்கு மகனாக வேலன்(முருகன்) விளங்கினான். "சங்க காலத்திலே கொற்றவையான பழையோள், உமையாகவும் துர்க்கையாகவும் காட்சி தரும் சிவ சக்தியோடு ஒன்றி விட்டாள்" என்று கூறுகிறார் (Ramakrishnan, 1978). பழந்தமிழரின் கொற்றவை, சைவத்தில் சிவனுடைய சக்தியாக அதாவது சிவன், உமையொரு பாகனாகக் காணப்பட்ட போது சிவனோடு இணைக்கப்பட்டாள் (Ramakrishnan, 1978). விவேகானந்தர் தம் பக்தி யோகத்தில், "காளி, துர்க்கை முதலியன கிராமப் பாதுகாப்புக்கு உரிய சிறிய தெய்வங்களாக ஆதியில் இருந்தன. படிப்படியாக அவை பற்றிய கோட்பாடு விரிவடைந்தது. அன்னை பராசக்தி வழிபாடாக அவை திருந்தியமைந்தன. பராசக்தியும், பரம்பொருளும் ஒன்றேயென்னும் கோட்பாடு இறுதியில் வந்தமைந்தது" என விளக்கியுள்ளார் (Vivekanandar, 1959).

## பாவை நோன்பு

தாய்த் தெய்வ வழிபாட்டில் பாவை நோன்பு சிறப்பிடம் பெற்றிருந்தது. பாவை போன்ற ஒரு பெண்ணின், தாய்த் தெய்வத்தின் வடிவை அமைத்து வணங்கி, வழிபட்டுப் பின் நீராடுவர். தாய்த் தெய்வ வழிபாட்டிற்குரிய இந்த நோன்பே பாவை நோன்பாகும். இந்தப் பாவை நோன்பு என்பது கன்னிப் பெண்களால் மார்கழி மாதத்தில் தொடங்கப் பெற்று, அம்மாதத்துப் பௌர்ணமியோடு முடிக்கப்பெறும் ஒரு விரதமாகும். தைந்நீராடல், திருவாதிரைத் திருவிழா, ஆருத்திரா தரிசனம் போன்றவை பாவை நோன்பு குறித்துத் தோன்றியவையே. பாவை நோன்பு சங்க காலத்தில் தை மாதத்தில் நிகழ்ந்தது. ஆனால் இன்று மார்கழி மாதத்தில் நடக்கின்றது. பாவை நோன்பையொட்டிப் பிற்காலத்தில் எழுந்த நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், சடங்குகள் ஆகியவைகளைச் சைவர்களின் திருவெம்பாவையிலும், வைணவர்களின் திருப்பாவையிலும் காண்கிறோம். பாவை நோன்பு கூட்டு வழிபாடாக, நாட்டு மக்களுக்கு மழை பொழிவிக்கும் சமுதாயப் பணியாகவும் அமைந்தது. பனிப்பருவம் உலகிற்கு வெம்மையை விளைவிப்பதால், பனி குறைவதற்கு மழை நன்கு பொழிய வேண்டும். அதற்காக

உமையம்மையை வழிபட்டு, இளமகளிர் போற்றும் வழக்கம் இந்த பக்தி இலக்கியங்களில் குறிக்கப்பட்டுள்ளது.

## சமயநெறிக் காலத்தில் பெண்கள்

### பௌத்த மதத்தில் பெண் துறவிகள்

பௌத்த மதத்தில் பெண் துறவிகளின் பங்கு பெரிதும் போற்றத்தக்கது. அவர்களுள் 'தேரிகள்' எனப்படுவோர் பக்திப் பாடல்களைப் பாடினர். மணிமேகலை பசிப்பிணி மருத்துவம் செய்து சமுதாயப் புரட்சி செய்தார். மேலும் குண்டலகேசி, நீலகேசி சிறந்த சமயவாதிகளாக விளங்கினர். அசோகச் சக்கரவர்த்தியின் மகள் சங்கமித்திரை பௌத்த மதத்தினைப் பரப்ப தன் வாழ்வை அர்ப்பணித்தார். மகாபஜாபதி, கௌதமி, அம்போலி போன்றவர்களும் சிறந்த பெண் துறவிகளாக விளங்கினர். மதப்பணிக்காகப் பெண்களும் துறவிகளாகப் பணியாற்றலாம் என்ற நிலையை முதன்முதல் ஏற்படுத்தியவர்கள் பௌத்த மதப் பெண் துறவிகள் ஆவர். வெளிநாடுகளில் கூட மணிமேகலை கடல் காக்கும் தெய்வமாகப் போற்றப்பட்டாள்.

### சமண மதப் பெண் துறவிகள்

சமண மதம் தமிழகமெங்கும் பரவிய போது சமணப் பெண் துறவிகள் பலரும் வாழ்ந்து சமயப்பணியும், சமுதாயப் பணியும் ஆற்றியுள்ளனர். இவர்கள், 'குரத்திகள்' எனப்பட்டனர். கவுந்தியடிகள் சிறந்த துறவியாக விளங்கியமையைச் சிலப்பதிகாரம் கூறுகிறது. "கி.பி 880 -ல் சமணத் துறவியும் அவரது 500 மாணாக்கர்களும் 400 மாடக்கன்னிகளும் ஒரு பள்ளியில் இருந்தனர்" எனக் குறிப்புகள் காணப்படுகின்றன (Arangasamy, 1976). சோழர் காலத்தில் 500 -க்கும் மேற்பட்ட பெண் துறவிகள் இருந்தததாகக் கூறப்படுகிறது. அவர்கள் செல்வாக்குப் பெற்றவர்களாக விளங்கினர். யாப்பணியா சங்கம் என்ற சமணப் பிரிவு பெண்களுக்கு மோட்சம் உண்டு என்று கூறுகிறது.

### கிறித்தவ மதப் பெண் துறவிகள்

உலக அளவில் கிறித்தவ மதம் பரவுவதற்குக் காரணமானவர்களுள் கிறித்தவப் பெண் துறவிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். ஐரோப்பிய நாடுகளில் முதலில் ஆண், பெண் துறவிகளுக்கான பயிற்சி மையங்கள் உருவாக்கப்பட்டு துறவற அமைப்பு உருவானது. கும்ரான் குகைகளில் தங்கி வாழ்ந்த எசேனியர்கள் வாழ்வு முறையைப் பின்பற்றி, மடங்கள் போன்ற துறவற அமைப்புகள் உருவாயின. இந்தியாவில் தமிழகத்தில் முதன்முதலில் பெண்கள் அங்குள்ள துறவற அமைப்புகளோடு தங்களை இணைத்துக் கொண்டு துறவிகளாக வாழ்ந்தனர். வெளிநாடுகளிலிருந்து இங்கு வந்த பெண் துறவிகள் அவர்களுக்குத் தம் கலாச்சாரத்தை ஒட்டிய பயிற்சிகளை அளித்தனர். கி.பி 1857 -ல் தொடங்கிய புனித வியாகுல மாதா பெண்கள் சபை குறிப்பிடத்தக்கது. பெண் துறவிகள் சிறப்பான மறைப்பணிகள் புரிந்து, அவர்களுள் சிலர், புனிதர் நிலைக்கும் உயர்த்தப்பட்டனர். கிரேக்க நாட்டுப் புனித கேத்ரீன், ஸ்பெயின் நாட்டுப் புனித அவிலா தெரசாள் சிறந்த மறைவல்லுநர்களாகவும் (Theologians) திதழ்ந்தனர்.

தூய பவுலின் சரிதையில் வரும் மரியாள், தெக்லா, லீதியாள் போன்றோர் பலவித எதிர்ப்புகளுக்கிடையே பணியாற்றினர். புனித மார்கரீத் மரியாள் வரலாறு, மிகச் சிறு வயதிலேயே துறவியாக வாழ்ந்து, புனித நிலைக்கு உயர்த்தப்பட்ட இயேசுவின் புனித குழந்தை தெரசா இவர்களின் வரலாற்றில் காணும் பக்தி நெறி சிறப்பு வாய்ந்தது. அண்மையில் இந்தியாவில் கேரளாவைச் சேர்ந்த பெண் துறவி அல்போன்சம்மா துறவியாக உயர்த்தப்பட்டார். பெண் துறவிகளைப் பற்றி தம் நூலில் பட்டியலிடும் நிக்கோலாஸ் அடிகளார், "அல்போன்சம்மா(கேரளா), ஆஞ்சலா (இத்தாலி), எமிலி(பிரான்ஸ்), மார்த்தினா(ரோம்), ஆகத்தம்மாள்(சிசிலி), முதலியோர் இவ்வகையில் புனிதர்களாக அறிவிக்கப்பட்டு போற்றப்படுகின்றனர்" (Nicholas, 1976).

## இஸ்லாம் மதத்தில் பெண்ணடியார்கள்

இஸ்லாம் மதத்தில் பெண் துறவிகள் என்ற நிலையில் அமைப்புகள் எதுவும் இல்லை. எனினும் நபிகள் நாயகம் வாழ்ந்த காலத்திலும், அதற்குப் பின்னரும் இஸ்லாமிய நெறியில் பெண்களும் சிறந்த தொண்டாற்றியுள்ளனர். ஏழைகளுக்கு உதவுவதிலும், போர்க்களம் செல்வதிலும் பெண்களும் முன் நின்று செயல்பட்டுள்ளனர். பாத்திமா என்ற பெண்மணி நபிகள் நாயகத்தின் மகளாக இருந்தும், வறுமையில் வாழ்ந்த போதிலும், செம்மையான வாழ்வு நடத்தி இஸ்லாம் அறத்தைப் பேணினார். அன்னை ஆயிஷா என்ற பெண்மணி தமக்கென எதையும் சேமித்து வைக்காமல், எல்லாவற்றையும் ஏழைகளுக்கு உதவினார். அரேபியாவைச் சேர்ந்த ரபியா சிறந்த சமய ஞானியாக விளங்கினார். கன்ஸா ரவியல்லாஹு_ன்ஹா என்ற பெண்மணி அரபு நாட்டின் பிரபலமான பெண் கவியாக விளங்கினார். ஹிஜ்ரி என்ற வீரப் பெண்மணி காதிஸிய்யாப் போரின் போது தம்முடைய நான்கு மகன்களுடன் அந்தப் போரில் கலந்து கொண்டதாகக் குறிப்புகள் காணப்படுகின்றன. கைபர் போரிலும் பெண்கள் பலர் கலந்து கொண்டனர். இவ்வாறு இஸ்லாம் சமயத்திலும் பெண்கள் சிறப்பாக சமயத் தொண்டாற்றியுள்ளனர்.

## சைவ சமயப் பெண்ணடியார்கள்

### காரைக்காலம்மையார்

பெரியபுராணத்தில் காரைக்காலம்மையாரின் வரலாற்றை சேக்கிழார் தெளிவாக விளக்கியுள்ளார். அம்மையார் காரைக்காலில் ஒரு செல்வக் குடும்பத்தில் பிறந்தவர். அவரது இயற்பெயர் புனிதவதியார். இல்லற வாழ்வில் ஈடுபட்டிருந்த நிலையில் அம்மையாரின் பக்தி திறனைக் கண்டு, அவரது கணவன் வியந்து வணங்கிப் பின் அவரை விட்டுப் பிரிந்ததாகவும், அவ்வாறு இல்லறத்தில் ஈடுபட்டிருந்தபோது, இறைவன் அருளால் நிகழ்ந்த அற்புதச் செயல்கள் குறித்த வரலாற்று நிகழ்வுகளும் பெரிய புராணத்தில் விளக்கப்பட்டுள்ளது. கணவன் தன்னை விட்டுப் பிரிந்த நிலையில் முழுவதுமாகத் தன்னை இறைத் தொண்டில் ஈடுபடுத்திக் கொண்ட அம்மையார், இறைவனிடம் வரம் வேண்டி, தம் அழகிய பெண்ணுருவை மாற்றிக் கொண்டு எலும்புருவம் பெற்றுக் கொள்கிறார். இதனால் எவ்வித இடையூறும் இன்றி பல இடங்களுக்கும் சென்று பல பக்திப் பாடல்களைப் பாடியுள்ளார். அம்மையார் என்புருவம் பெற்றவுடனேயே அற்புதத் திருவந்தாதியும், திருவிரட்டை மணிமாலையும் பாடினார். அவை பாண்டிய நாட்டில் பாடப்பெற்றவை. மேலும் திருவாலங்காட்டில் மூத்த திருப்பதிகள் இரண்டையும் பாடினார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. காரைக்கால் அம்மையார் பற்றிய செய்திகளை முதன்முதலில் நம்பி ஆரூரரின் திருத்தொண்டத் தொகையும், நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியும், வரலாற்றைச் சேக்கிழாரின் பெரிய புராணமும் எடுத்தியம்புகின்றன.

சிவபெருமானால் அம்மையே என அழைக்கப்படும் பேறு பெற்ற காரைக்காலம்மையார் இறைவனை அப்பனே என அழைத்து அவரது திருவடிகளை வணங்கினார். கடவுளை நோக்கி அப்பா என அழைக்கும் மரபு பக்தி இலக்கிய வரலாற்றில் முதன்முதல் அம்மையாரிடமே காணப்பட்டது. காரணம் ஓரிறைக் கடவுட் கொள்கையும், கடவுள் அவதாரம் எடுத்து வந்த செய்தியால் அப்பா - மகன் என்ற உறவு நிலையும் பக்தி நிலையில் வளர்ச்சிபெற்றன. இறைவன் அம்மையாரிடம் எம்மிடம் வேண்டும் வரம் என்ன? என்று கேட்ட போது, 'என்றும் மாறாத இன்ப அன்பு வேண்டும், பிறவாமை வேண்டும், மீண்டும் பிறப்பு உண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும். நீர் திருநடனம் ஆடுகின்றபோது, மகிழ்ந்து உம்மை பாடிக் கொண்டே என்றும் உம் திருவடியின்கீழ் இருத்தல் வேண்டும் என்று கூறியதாகச் சேக்கிழார் பின்வருமாறு பாடியுள்ளார்.

"இறவாத இன்ப வன்ப வேண்டிப் பின் வேண்டு கின்றார்

பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்

மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி

யறவாநீயாடும் போதுன் அடியின்கீழ் இருக்க" (Gnanasambandan, 1999)

### மங்கையர்க்கரசியார்

பாண்டிய நாட்டில் சைவநெறி தளர்ச்சியுற்று மன்னன் சமண நெறியில் நின்ற காலத்தில் தம் கணவராகிய பாண்டிய மன்னனை மீண்டும் சைவராக்கி சைவம் தழைக்கக் காரணமாக இருந்தவர் மங்கையர்க்கரசியார். இவர் அமைச்சர் குலச்சிறையாருடன் திருஞானசம்பந்தர் அருளால் சமணத்தை வீழ்த்தினார் என வரலாறு கூறுகிறது.

### திலகவதியார்

திருநாவுக்கரசரின் தமக்கையாரான திலகவதியார் தம் வாழ்நாள் முழுமையுமே சிவப்பணிக்காக அர்ப்பணித்தவர் ஆவார். தம் தம்பியாகிய திருநாவுக்கரசரை சிவபெருமானிடம் அருள் வேண்டி சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாற்றினார். திருநாவுக்கரசர் சமயப் பணியோடு, சமுதாயப் பணியும் ஆற்றுவதற்கு உறுதுணையாக இருந்தார்.

### திருநீலகண்டர் மனைவி

சிவபக்தரான திருநீலகண்டரின் மனைவியும் தம் கணவரைப் போன்றே சிறந்த சிவபக்தையாக விளங்கினார். தம் கணவர் தவறிழைத்த போது சுட்டிக்காட்டி நல்வழிப்படுத்திய சான்றாண்மையோடு விளங்கினார் என சேக்கிழார் குறிப்பிடுகிறார்.

### இசை ஞானியார்

மும்மூர்த்திகளில் ஒருவரான சுந்தரரைப் பெற்றெடுத்த இவர் ஆதிசைவர் குலத்தில் தோன்றியவர். இவரும் சிறந்த சிவனடியாராக விளங்கி சைவத்திற்குப் பெருமை சேர்த்தார் என சேக்கிழார் போற்றுகிறார்.

## வைணவப் பெண்ணடியார்

### ஆண்டாள்

இவர் வைணவ அடியார்களான ஆழ்வார்களுள் ஒருவர். இவர் திருப்பாவையின் முப்பது பாசுரங்களைப் பாடியுள்ளார். இவரது பாசுரங்களை வேதமனைத்திற்கும் வித்து எனப் போற்றியுள்ளனர். இவர் பெரியாழ்வாரின் பெண் மகள். ‘சூடிக் கொடுத்த சுடர்க்கொடி’ எனவும் சிறப்பிக்கப்படுகிறார். பக்தி பாசுரங்களைப் பாடி வாசுதேவனையே மணாளனாகப் பெறும் வாய்ப்பினைப் பெற்றார். இவரது பாசுரங்கள் நந்தகோபன் குமரனை நாயகனாக ஏற்க வைத்ததோடு, தமிழ்ச் சமுதாயத்தை நெறிப்படுத்துவதற்கும் உறுதுணையாக அமைந்துள்ளது. இன்று மிக உயர்ந்ததெனப் பேசப்படுகின்ற வேதங்களுக்கும், உபநிடதங்களுக்கும் வித்தாக அமைந்ததே இவரது திருப்பாவை எனப் போற்றப்படுகிறது (Anbarasu, 2001).

“மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளில்

கார்மேனிச் செங்கண்ணன் கண்ணபிரான் - பேர் பாடித்

தந்தார்நம் கோதையார் சங்கத் தமிழ்தன்னைச்

சிந்தைக் கினியதெனச் செப்பு!”-

என்று திருப்பாவையின் சிறப்பைக் அழகான பாடல் வழி எடுத்துரைக்கிறார் (Anbarasu, 2001).

## முடிவுரை

இவ்வாறு இயற்கை நெறிக் காலத்தில் தாய்வழிச் சமுதாயத்தில் பெண் தெய்வங்கள் முதன்மை பெற்றுத் திகழ்ந்தன. அதன் பிறகு நிகழ்ந்த சமூக மாற்றத்தால் தந்தை வழிச் சமூகமாக்கப்பட்டு பெண் தெய்வங்கள், ஆண் தெய்வங்களின் துணை தெய்வங்களாக மாற்றப்பட்டன. பல்வேறு சமயங்களிலும் பெண்கள் துறவிகளாக, கன்னிமார்களாக, அடியார்களாக, குடும்பப் பெண்களாக இருந்து சமயப்பணியாற்றி வந்துள்ளனர். சங்ககாலத்திற்குப் பிற்பட்ட பக்தி இயக்க காலத்திலும் பக்தி நெறியிலும், சமயத் தொண்டிலும், சமூகத் தொண்டாற்றுவதிலும் முதன்மை பெற்றுத் திகழ்ந்துள்ளார்கள். பிற்பட்ட கால கட்டங்களில் படிப்படியாக பெண்கள் சமுதாயத்தில் மிகப் பின்னுக்குத் தள்ளப்பட்டனர். தாய்வழிச் சமூகத்தில் வளமையாக கருதப்பட்ட பெண்மை, தீட்டதாகக் கருதி ஒதுக்கப்பட்டது. சமய வழிபாடுகளில் பெண்கள் முற்றிலும் ஒதுக்கப்பட்டனர். இன்றைய நிலையில் சமத்துவமற்ற நிலையே அனைத்து சமயங்களிலும் காணப்படுகிறது. மறுக்கப்பட்டு வரும் இந்த சமத்துவ நிலை அடிப்படை உரிமை என்ற நிலையில் மீண்டும் பேணப்பட வேண்டும் என்பது இக்கட்டுரை வழி வலியுறுத்தப்படுகிறது.

## References

Anbarasu, Salem Paa., (2001) Andal Aruliya Thiruppavai Nachiyar Thirumozhi, Vijaya Pathippagam, Chennai, India.

Gnanasambandan, A.S. (1999) Periya Puranam Oor Aaivu, Gangai Puthaka Nilayam, Chennai, India.

Kundrakkudi Adigalaar, (2011) Thirukkural Urai Valam, Shri Shenbaga Publications, Chennai. India.

Nicholas, (1976) History of Saints, Bishop House, Thoothukudi, Tamil Nadu, India.

Ramakrishnan, (1978) Samaya Vaazhvil Vadakkum Therkum, New Century Book House, Chennai, India.

Samy, P.L. (1976) Thamizh Ilakkiyaththil Thaai Dheiva Vazhibaadu, New Century Book House, Chennai, India.

Seenivasan, R. (1975) Shakthi Vazhibaadu, Jeyekumari Stores, Nagercoil, Tamil Nadu, India.

Vivekanandar, (1959) Bhagavat Geethai, Bhakthi Yoga Vilakkam, Thabo Vanam Publications, Trichy, Tamil Nadu, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License